அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைஇல 30/92

எனது இல. 111/140எல்/100தி6/11/
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.

1992 ஒக்டோபர் மாதம் 15ஆந் திகதி

அமைச்சுகளின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள், திணைக்களங்களின் தலைவர்கள்
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,

சலுகை நியதிகளில் வாகனங்களை இறக்குமதி செய்த
உத்தியோகத்தர்களினால் உத்தியோக பூர்வ வாகனங்கள்
உபயோகிக்கப்படல்.

1991 மே மாதம் 8ஆந் திகதியிட்ட 14/91ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

02. 1991 மே மாதம் 8ஆந் திகதியிட்ட 14/91ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 2(ஏ)ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்கள் இத்தால் வகுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த வகுதிகளில் ஒவ்வொன்றுக்கும் பிரயோகிக்கப்பட வேண்டியுள்ள சலுகைகளும் மட்டுப்படுத்தல்களும் அதற்கமைவாகத் தரப்பட்டுள்ளன.

வகுதி1: உத்தியோ பூர்வ பிரயாணத்துடன் கூடுதலாக மட்டுப்படுத்தப் படாத சொந்தப்பிரயாணம் செய்வதற்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள்,

இந்த உத்தியோகத்தர்கள் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை சொந்த பிரயாணம், உத்தியோக பூர்வ பிரயாணம் ஆகிய இரண்டுக்கும் உபயோகிக்கப்படுத்த வேண்டுமெனபதுடன் அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் பங்கீடுவழங்கப்படல் வேண்டும். அவர்கள் தினசரி ஓட்ட அட்டவணையொன்றை பேணுதல் வேண்டும். உத்தியோக பூர்வ வாகனங்கள் அவர்களுக்கு வழங்கப்படலாகா.

/02

இவ்வுத்தியோகத்தர்கள் சலுகை நியதிகளில் வாகனங்களை இறக்குமதி செய்தாலும் கூட அவர்களுக்கு உத்தியோக நோக்கத்திற்காக வெளியூர்களில் நீண்ட தூரம் பிரயாணம் செய்வதற்கும் உத்தியோகபூர்வ வாகனத்தை கொடுக்கப்படல் வேண்டும். எனினும் உத்தியோகபூர்வ வாகனங்கள் கிடைக்காமலிருக்கும்போது அத்தகைய பிரயாணத்திற்குச் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்த வாகனங்களை உபயோகிப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படலாம். அவர்களுடைய வாகனங்கள் மூலம் செய்யப்பட்ட அத்தகைய பிரயாணத்திற்கு அவர்களுக்கு மைற்கூலி வழங்கப்பட வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர்கள் வெளியூர்களில் செய்யப்படும் அத்தகைய நீண்ட தூரப்பிரயாணத்திற்கு உத்தியோக பூர்வ வாகனங்களை அல்லது அவர்களுடைய சொந்த வாகனங்களை உபயோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் அல்லது திணைக்களத் தலைவரின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: இச்சுற்றறிக்கையின் நோக்கத்திற்காகக்குறுகிய தூரம் என்பது 10 மைல் தூரமும் அதற்கு குறைந்த தூரமும் எனப் பொருள்படும்.

நீண்ட தூரம் என்பது 10மைல்களுக்கு மேற்பட்ட தூரம் எனப்பொருள்படும்

வகுதி6: மாதாந்த பிரயாணப்படியைப் பெறும் உத்தியோகத்தர்கள்.

இந்த உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக பூர்வவாகனங்கள் கொடுக்கப்படலாகாது. இவர்கள் உத்தியோபூர்வ பிரயாணத்திற்குச் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்தவாகனங்களை உபயோகிக்க வேண்டுமென்பதுடன் இவர்களுக்கு மாதாந்த பிரயாணப்படியும் வழங்கப்படல் வேண்டும்.

03. <u>மைற்கூலிக் கொடுப்பனவின் எல்லைகள்.</u>

சம்பந்தப்பட்ட நிதியாண்டிற்கான மதிப்பீடுகளில் வழங்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் எல்லைக்குள் மைற்கூலிக் கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். சலுகை நியதிகளில் வாகனங்களை இறக்குமதி செய்த உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப் பிரயாணத் தூரத்திற்கான மைற்கூலிக் கொடுப்பனவிற்கு மேலதிக வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் வழங்கப்படமாட்டாது.

04. இச்சுற்றறிக்கை திறைசேரிச் செயலாளரின் ஒருபாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: எம். என். ஜுனைட்
செயலாளர்
அரசாங்கநிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

இந்த உத்தியோகத்தர்களும் சொந்தப் பிரயாணம், உத்தியோக பூர்வ பிரயாணம் ஆகிய இரண்டுக்கும் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்த வாகனத்தை உபயோகித்தல் வேண்டும். அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் பங்கீடு வழங்கப்படல் வேண்டும். அவர்கள் தினசரி ஓட்ட அட்டவணையொன்றைப் பேணுதல் வேண்டும். அவர்களுக்கு உத்தியோக பூர்வவாகனங்கள் வழங்கப்படலாகாது.

வகுதி3 : உத்தியோக பூர்வ பிரயாணத்துடன் கூடுதலான வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வருவதற்கும்போவதற்குமான பிரயாணத்தை மேற்கொள்ளுவதற்கும் உரித்துடைய உத்தியோகத்தர்கள்.

இந்த உத்தியோகத்தர்களும் கூட சொந்த பிரயாணம், உத்தியோக பூர்வ பிரயாணம் ஆகிய இரண்டையும் மேற்கொள்ளுவதற்குச் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்த வாகனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் இவர்களுக்கு நியாயமான அளவு எரிபொருள் பங்கீடும் வழங்கப்படல் வேண்டும். இந்த எரிபொருள் பங்கீட்டின் அளவு சம்பந்தப்பட்ட பிரயாண தூரத்தைக் கருத்திற் கொண்டு கொள்கை திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் நிர்ணயிக்கப்பட வேண்டும். இவ்வுத்தியோகத்தர்கள் தினசரி ஓட்ட அட்டவணையொன்றைப் பேணுதல் வேண்டும். இவர்களுக்கு உத்தியோக பூர்வ வாகனங்கள் வழங்கப்படலாகாது.

வகுதி4 : சொந்தப் பிரயாணத்திற்கு உத்தியோக பூர்வ வாகனங்களை உபயோகிக்க உரித்துஇல்லாதவர்களும் உத்தியோக பூர்வ பிரயாணத்திற்கு உத்தியோக பூர்வ வாகனங்களை உபயோகிக்குமாறு வேண்டப்படுகின்றவர்களுமான உத்தியோகத்தர்கள்.

இவ்வுத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்திலிருந்து ஆரம்பிக்கும் குறைந்த தூரத்திற்கு உத்தியோக பூர்வ வாகனங்கள் வழங்கப்படல் வேண்டும். எனினும் அவ்வுத்தியோகத்தர்கள் அவர்களுடைய இல்லங்களிலிருந்து பிரயாணங்களை ஆரம்பிக்க வேண்டியதாகவிருந்தால் அவர்கள் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவர்களுக்கு மைற்கூலி கொடுக்கப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர்கள் அத்தகைய பிரயாணத்திற்கு தங்களுடைய வாகனங்களை உபயோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் அல்லது திணைக்கள தலைவரின் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

வகுதி5 : உத்தியோக நோக்கங்களுக்காக வெளியூர் நிலையங்களில் நீண்டதூரம் பிரயாணம் செய்ய வேண்டியுள்ள உத்தியோகத்தர்கள்.

30/92



இவ்வுத்தியோகத்தர்கள் சலுகை நியதிகளில் வாகனங்களை இறக்குமதி செய்தாலும் கூட அவர்களுக்கு உத்தியோக நோக்கத்திற்காக வெளியூர்களில் நீண்ட தூரம் பிரயாணம் செய்வதற்கும் உத்தியோகபூர்வ வாகனத்தை கொடுக்கப்படல் வேண்டும். எனினும் உத்தியோகபூர்வ வாகனங்கள் கிடைக்காமலிருக்கும்போது அத்தகைய பிரயாணத்திற்குச் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்த வாகனங்களை உபயோகிப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படலாம். அவர்களுடைய வாகனங்கள் மூலம் செய்யப்பட்ட அத்தகைய பிரயாணத்திற்கு அவர்களுக்கு மைற்கூலி வழங்கப்பட வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர்கள் வெளியூர்களில் செய்யப்படும் அத்தகைய நீண்ட தூரப்பிரயாணத்திற்கு உத்தியோக பூர்வ வாகனங்களை அல்லது அவர்களுடைய சொந்த வாகனங்களை உபயோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் அல்லது திணைக்களத் தலைவரின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: இச்சுற்றறிக்கையின் நோக்கத்திற்காகக்குறுகிய தூரம் என்பது 10 மைல் தூரமும் அதற்கு குறைந்த தூரமும் எனப் பொருள்படும்.

நீண்ட தூரம் என்பது 10மைல்களுக்கு மேற்பட்ட தூரம் எனப்பொருள்படும்

வகுதி6: மாதாந்த பிரயாணப்படியைப் பெறும் உத்தியோகத்தர்கள்.

இந்த உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக பூர்வவாகனங்கள் கொடுக்கப்படலாகாது. இவர்கள் உத்தியோபூர்வ பிரயாணத்திற்குச் சலுகை நியதிகளில் இறக்குமதி செய்தவாகனங்களை உபயோகிக்க வேண்டுமென்பதுடன் இவர்களுக்கு மாதாந்த பிரயாணப்படியும் வழங்கப்படல் வேண்டும்.

03. <u>மைற்கூலிக் கொடுப்பனவின் எல்லைகள்.</u>

சம்பந்தப்பட்ட நிதியாண்டிற்கான மதிப்பீடுகளில் வழங்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் எல்லைகளுக்குள் மைற்கூலிக் கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். சலுகை நியதிகளில் வாகனங்களை இறக்குமதி செய்த உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப் பிரயாணத் தூரத்திற்கான மைற்கூலிக் கொடுப்பனவிற்கு மேலதிக வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் வழங்கப்படமாட்டாது.

04. இச்சுற்றறிக்கை திறைசேரிச் செயலாளரின் ஒருபாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: எம். என். ஜுனைட்
செயலாளர்
அரசாங்கநிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

ந. அ